<u>கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், இலால்குடி.</u>

முன்னிலை. செல்வி. மு.அபிநயா., **B.A. B.L..,**
கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,
இலால்குடி.

2023–ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 25–ம் நாள் செவ்வாய் கிழமை,
இ.ம.எண்.1/2021 in அ.வ.எண்.24/2021

---------

பிரட்ரிக் அருள்

... மனுதாரர்/வாதி

/எதிர்/

1. அந்துவான்
2. ஸ்டீபன்
3. மேரி
4. டேனியல்
5. தாமஸ் ... எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

இம்மனு 09.03.2023–ம் தேதியன்று இறுதி விசாரணைக்காக என் முன்பு வந்த போது மனுதாரர்/வாதி தரப்பில் வழக்கறிஞர் திரு.S.சேவியர் அவர்கள் முன்னிலையாகியும், 2 முதல் 5ம் எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு.M.ராஜேந்திரகுமார் அவர்கள் முன்னிலையாகியும், 1ம் எதிர்மனுதாரருக்கு அழைப்பாணை சார்வு செய்யப்பட்டும், 1ம் எதிர்மனுதாரரை அழைத்தும் ஆஜராகாததால் ஒருதலைபட்ச உத்தரவு பிறப்பிக்கப்பட்டும், மனு, எதிருரை மற்றும் ஆவணங்களைப் பரிசீலித்தும், இருதரப்பு வாதுரைகளை கேட்டறிந்தும், இதுநாள் வரை, இந்நீதிமன்ற ஆய்விலிருந்து, இன்று இந்நீதிமன்றம் பிறப்புவிக்கும்...

<u>உத்தரவு</u>

1. மனுதாரர் தரப்பில் உரிமையியல் நடைமுறை சட்டம் வகுமுறை 39 விதி 1, 2 மற்றும் பிரிவு 151–ன் கீழ் இம்மனு தாக்கல்

செய்யப்பட்டுள்ளது. வழக்கு சொத்துக்களில் மனுதாரர்/வாதியின் அமைதியான அனுபவத்திற்கும், சுவாதீனத்திற்கும் எதிர்மனுதாரர்களோ/ பிரதிவாதிகளோ, அவர்களது ஆட்களோ அல்லது முகவரோ சட்டப்படி அன்னியில் சட்டவிரோதமாக எந்தவிதமான இடையூறுகளும் ஏற்படுத்தாத வகையில் எதிர்மனுதாரர்கள்/ பிரதிவாதிகளுக்கு எதிராக இவ்வழக்கு முடியும் வரை ஒரு தற்காலிக உறுத்துக்கட்டளை பரிகாரம் வழங்கக் கோரி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. இம்மனுவில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை யாதெனில் மனுதாரர் தரப்பில் உரிமையியல் நடைமுறைச் சட்டம் வகுமுறை 39 விதி 1, 2 மற்றும் பிரிவு 151–ன் கீழ் தாக்கல் செய்யப்பட்டுள்ள இம்மனு அனுமதிக்கத்தக்கதா? இல்லையா? என்பதே ஆகும்.

3. இருதரப்பும் கேட்கப்பட்டது. மனு அபிடவிட் எதிருரை, வழக்காவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டன. இந்த மனுவானது இடைக்கால தடை உறுத்துக்கட்டளை பரிகாரம் வேண்டி மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மனுதாரரின் தந்தை திவ்வியராஜ்–ன் உறவினரான சாமிக்கண்ணு வன்னிரிடம் சின்னு வன்னியர் கடனாக ரூ.200/– பெற்று கொண்டு மேற்படி சாமிக்கண்ணு வன்னியரிடம் விரகாலுர் கிராமம் அயன் புஞ்சை சர்வே எண்.426/3 கட்டுப்பட்ட ஏக்கர் 0.34 சென்ட் நிலத்தையும் அயன் புஞ்சை சர்வே எண்.426/4ல் கட்டுப்பட்ட ஏக்கர் 0.98 சென்ட் நடுவில் ஏக்கர் 0.06 சென்ட் நிலத்தையும் மூன்று வருட காலக்கெடுவுக்கு அனுபோக ஒத்தி வைத்தார் என்றும் அதன்பேரில் மேற்படி சொத்துக்களை சாமிக்கண்ணு தன் சுவாதீனத்தில் வைத்து அதில் சாகுபடி செய்து வந்தார் என்றும் எடுத்துரைக்கப்பட்டது.

4. 30.06.1930ம் தேதி மனுதாரரின் தந்தை திவ்வியராஜின் உறவினரான மேற்படி சாமிக்கண்ணு வன்னியரிடம் முதல் பிரதிவாதியின் தாத்தாவான சின்னு வன்னியர் பெற்ற கடன் ரூ.200/- முதல் பிரதிவாதியின் தாத்தா சின்னு வன்னியர் கேட்டு கொண்டதன் பேரில் மனுதாரரின் தாத்தா பாக்கியம் வன்னியர் மேற்படி சாமிக்கண்ணுவிடம் கொடுத்து கடனை தீர்த்தார் என்றும் அதன்பேரில் புல எண்.426/4ல் கட்டுப்பட்ட ஏக்கர் 0.06 சென்ட் நிலத்தை முதல் பிரதிவாதியின் தாத்தா சின்னு வன்னியர் வாதியின் தாத்தா பாக்கியம் வன்னியரிடம் ஒப்படைத்தார் என்றும் மேற்படி சொத்துக்கள் தான் தாவா 1 மற்றும் 2 அயிட்ட சொத்துக்கள் என்றும் மேற்படி சொத்துக்களை வாதியின் தாத்தா பாக்கியம் வன்னியர் தனது சுவாதீனத்தில் வைத்து சாகுபடி செய்து வந்தார் என்றும் எடுத்துரைக்கப்பட்டது.

5. 30.06.1930 பெற்ற கடனை வாதியின் தாத்தா பாக்கியம் வன்னியர் சாமிக்கண்ணு வன்னியரிடம் தீர்த்த பிறகு மேற்படி சின்னு வன்னியர் வாதியின் தாத்தா பாக்கியம் வன்னியருக்கு கடனை திருப்பி கொடுக்காமல் 40 ஆண்டுகளுக்கு முன்பு இறந்துவிட்டார் என்றும் வழக்கு 1, 2 அயிட்ட சொத்துக்களை தன் சுவாதீனத்தில் வைத்து ஆண்டு அனுபவித்து வந்த மனுதாரரின் தாத்தா பாக்கியம் வன்னியர் அதில் சாகுபடி செய்து வந்த நிலையில், மேற்படி பாக்கியம் வன்னியரும் சுமார் 40 ஆண்டுகளுக்கு முன்பு இறந்துவிட்டார் என்றும் அவரது இறப்பு பதிவு செய்யப்படாததால், அவரது இறப்பு சான்றை மனுதாரரால் இவ்வழக்குரையுடன் தாக்கல் செய்ய இயலவில்லை என்றும் எடுத்துரைக்கப்பட்டது.

6. மனுதாரரின் தந்தை திவ்வியராஜ் பாக்கியம் வன்னியரின் மகன் என்ற முறையில் வழக்கு 1, 2 அயிட்ட சொத்துக்களை தன் சுவாதீனத்தில் வைத்து ஆண்டு அனுபவித்து வந்தார் என்றும் இந்நிலையில் மேற்படி மனுதாரரின் தந்தை 27.10.2018ம் தேதி இறந்துவிட்டார் என்றும் அதன்பின் திவ்வியராஜ்–ன் மகன் என்ற முறையில் வழக்கு 1, 2 அயிட்ட சொத்துக்களை மனுதாரர் அவரது சுவாதீனத்தில் வைத்து அதில் சாகுபடி செய்து வந்தார் என்றும் முதல் பிரதிவாதியின் தாத்தா சின்னு வன்னியரும், முதல் பிரதிவாதியின் தந்தை ஆரோக்கியசாமியும் மேற்படி கடனை தீர்க்காத நிலையில் மேற்படி ஆரோக்கியசாமி மனுதாரரை சந்தித்து மனுதாரரால் கடனை தீர்க்க இயலவில்லை என்றும், வழக்கு 1, 2 அயிட்ட சொத்துக்களை தங்களுக்கே கிரையம் செய்து கொடுப்பதாகவும் ஒப்பு கொண்டதன் பேரில் கிரையத்தொகை ரூ.3250/– என்று முடிவு செய்யப்பட்டது என்றும் அதன்பேரில் மேற்படி ஆரோக்கியசாமி மனுதாரருக்கு 18.10.1994ந் தேதி கிரையத்தொகை ரூ. 3250/–ஐ பெற்று மனுதாரருக்கு வழக்கு 1, 2 அயிட்ட சொத்துக்களை ஒரு பதிவு செய்யப்படாத கிரையப்பத்திரம் மூலம் கிரையம் செய்து கொடுத்துவிட்டார் என்றும் எடுத்துரைக்கப்பட்டது.

7. பாக்கியம் வன்னியரின் மனைவியும், மனுதாரரின் தந்தைவழி பாட்டியுமான மதலைமேரியிடம் முதல் பிரதிவாதியின் தந்தை ஆரோக்கியசாமி அயன் புஞ்சை சர்வே எண்.426/4, ஏக்கர் 0.98 சென்டில் ஏக்கர் 0.11–1/2 சென்ட் நிலத்தை ஈடாக காட்டி 17.06.1977ம் தேதி கடனாக ரொக்கம் ரூ.425/– பெற்றார் என்றும் அதற்கு ஆதரவாக மேற்படி முதல் பிரதிவாதியின் தந்தை ஆரோக்கியசாமி மனுதாரரின் தந்தைவழி பாட்டியான மேற்படி மதலைமேரிக்கு ஒரு ஒப்பந்தப்பத்திரம் எழுதி

கொடுத்துள்ளார் என்றும் மேற்படி சொத்து தான் தாவா 3 வது அயிட்ட சொத்தாகும் என்றும் மேற்படி ஒப்பந்த பத்திரத்தில் கண்டுள்ளபடி மேற்படி ஆரோக்கியசாமி மனுதாரரின் பாட்டி மதலைமேரியிடம் கடனுக்கான வட்டிக்காக மேற்படி நிலத்தை அவரிடம் ஒப்படைத்ததோடு, மேற்படி கடனை மேற்படி ஆரோக்கியசாமி மூன்று வருடத்திற்குள் திருப்பி கொடுத்து தீர்த்துவிடுவதாகவும், தவறும்பட்சத்தில் மேற்படி சொத்தை மேற்படி மதலைமேரிக்கு கிரையம் செய்து கொடுப்பதாகவும் ஒப்புக்கொண்டுள்ளார் என்றும் எடுத்துரைக்கப்பட்டது.

8. மேற்படி கடனுக்கு ஆதரவாக மேற்படி ஆரோக்கியசாமி மனுதாரின் பாட்டி மதலைமேரிக்கு 17.06.1977 ம் தேதி ஒரு கடனுறுதி சீட்டும் எழுதி கொடுத்துள்ளார் என்றும் ஆனால் முதல் பிரதிவாதியின் தந்தை மேற்படி ஆரோக்கியசாமி மேற்கூறியுள்ள கடனை மனுதாரரின் பாட்டியிடம் திருப்பி கொடுக்கவில்லை என்றும் இந்நிலையில் மேற்படி மனுதாரின் பாட்டியான மதலைமேரி கடந்த 15 வருடங்களுக்கு முன்பு இறந்துவிட்டார் என்றும் அவரது இறப்பு பதிவு செய்யப்படாததால் அவரது இறப்பு சான்றை மனுதாரரால் இவ்வழக்குரையுடன் தாக்கல் செய்ய இயலவில்லை என்றும் எடுத்துரைக்கப்பட்டது. மதலைமேரிக்கு பிறகு வழக்கு 3 வது அயிட்ட சொத்தை மனுதாரரின் தந்தை திவ்வியராஜ்–ம், திவ்வியராஜ் 27.10.2018 ம் தேதி இறந்தபிறகு, அவரது வாரிசு என்ற முறையில் மனுதாரர் வழக்கு 3 வது அயிட்ட சொத்தை தன் சுவாதீனத்தில் வைத்து அதில் சாகுபடி செய்து வருகிறார் என்றும் எடுத்துரைக்கப்பட்டது.

9. மேற்கண்ட சூழ்நிலையில் பிரதிவாதிகள் 12.08.2020 தேதியில் மனுதாரரின் சுவாதீனத்திற்கும் இடையூறுகள் செய்ததோடு, அச்செயலை

தடுத்த மனுதாரருக்கு கொலை மிரட்டல் விடுத்தனர் என்றும் மேற்படி சம்பவம் குறித்து கல்லக்குடி காவல்நிலையத்தில் அதே தேதியில் மனுதாரர் புகார் அளித்தார் என்றும் எனவே இவ்வழக்கு மற்றும் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்று எடுத்துரைக்கப்பட்டது.

10. எதிர்மனுதாரர்கள் தரப்பில் போதிய வாய்ப்புகள் கொடுத்தும் மனு விசாரணைக்கு ஆஜராகாத காரணத்தினால் வழக்காவணங்களை வைத்து இம்மனு பரிசீலிக்கப்படுகிறது. 2 முதல் 5 எதிரமனுதாரர்கள் தரப்பில் மனுதாரரே தனது வழக்கை நிரூபிக்க கடமைப்பட்டவர் என்றும் மனுதாரர் தாக்கல் செய்துள்ள வழக்கானது சட்டப்படியும் நியாயப்படியும் நிலைக்கத்தக்கதல்ல என்றும் மனுதாரர் கூறுவது போல எந்த கடனும் பிரதிவாதிகளின் தாத்தா சின்னு வன்னியர் பெறவில்லை என்றும் தாவா சொத்து வாரிசுகள் என்ற அடிப்படையில் பிரதிவாதிகள் வசம் தான் உள்ளது என்றும் மனுதாரர் மனுவில் சொல்லியுள்ள 30.06.1930 மற்றும் 18.10.1994 தேதியிட்ட ஆவணங்கள் பொய்யானது மற்றும் மோசடியானது என்றும் 17.06.1977 தேதியில் எந்த ஒப்பந்த பத்திரமும் ஏற்படவில்லை என்றும் அவற்றை மனுதாரரே நிரூபிக்கக் கடமைப்பட்டவர் என்றும் எடுத்துரைக்கப்பட்டது.

11. உண்மையில் மனுதாரருக்கு தான் தாவா சொத்தை அனுபவம் செய்து வரும் பிரதிவாதிகளுக்கு இடையூறு செய்து வருகிறார்கள் என்றும் மனுதாரரின் தாத்தா பாக்கியம் வன்னியர் அவரது சகோதரர்களான செபஸ்தியர் வன்னியர் மற்றும் அருமைநாதன் வன்னியர் த.பெ.சின்னு வன்னியர் அவர்களுக்கு தாவா சொத்துக்கள் உள்ளிட்ட சொத்துக்களை பொருத்து 03.08.1944ம் தேதியிட்ட விடுதலை பத்திரம் ஏற்படுத்திக்

கொடுத்துள்ளார் என்றும் மேற்படி ஆவணத்தின் அடிப்படையில் செபஸ்தியர் வன்னியர் மற்றும் அருமைநாதன் வன்னியர் தாவா சொத்து உள்ளிட்ட சொத்துக்களின் சுவாதீனத்தில் இருந்து வந்தார்கள் என்றும் அவர்களுக்கு பின் அவர்களது வாரிசுதாரர்கள் சுவாதீனத்திலும் அனுபவத்திலும் இருந்து வருகிறார்கள் என்றும் மேற்படி வாரிசுதாரர்கள் வழக்கிற்கு அவசிய தரப்பினர்கள் என்றும் வழக்கு உரிய தரப்பினரை சேர்க்காத காரணத்தினால் பாதிப்படைகிறது என்றும் மனுதாரர் தூய கரங்களுடன் நீதிமன்றத்தை அணுகவில்லை என்றும் எனவே இம்மனு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்று எதிருரை மூலம் எடுத்துரைக்கப்பட்டது.

12. மனு, எதிர்மனுவுரை வழக்காவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டன. வழக்காவணங்களை ஆராய்ந்ததில் அசல் வழக்கானது நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரத்திற்காக தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும் இம்மனு தற்காலிக உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும் தெரியவருகிறது. மேலும் மனுதாரர் தனக்கு முதல் தோற்ற வழக்கு மற்றும் சமச்சீர் நிலை உள்ளது என்பதை நிரூபிக்கவில்லை என்று இந்நீதிமன்றம் கருதுகிறது. மேலும் மனு அனுமதிக்கப்படாவிட்டால் மனுதாரருக்கு ஈடு செய்ய முடியாத இழப்பு எதுவும் ஏற்படாது என்று இந்நீதிமன்றம் கருதுகிறது. அசல் வழக்கில் கோரியுள்ள பரிகாரத்தை தான் இம்மனுவில் தற்காலிகமாக கோரியுள்ளார். எனவே இந்த உறுத்துக்கட்டளை பரிகாரம் இருதரப்பு சாட்சிகளையும் விசாரணை செய்து இருதரப்பு வாதங்களையும் கேட்ட பிறகு தீர்மானிக்கப்பட வேண்டும் என்று இந்நீதிமன்றம் கருதுகிறது. எனவே

நீதியின் நலன் கருதி இம்மனு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்று இந்நீதிமன்றம் முடிவு காண்கிறது.

**முடிவாக, இம்மனு தள்ளுபடி செய்து இந்நீதிமன்றம் உத்தரவிடுகின்றது. செலவுத் தொகை இல்லை.**

இந்த உத்தரவு 2023–ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 25–ம் நாள் என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைதிருத்தம் செய்யப்பட்டு அவையறிய பகரப்பட்டது.

ஒப்பம்/–மு.அபிநயா,
கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,
இலால்குடி.

<u>மனுதாரர் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் –</u> இல்லை

<u>எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள் –</u> இல்லை

ஒப்பம்/–மு.அபிநயா,
கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,
இலால்குடி.